# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 66/2024** **Date:28.07.2026.**

**(PW1)- கீதா**

<u>**2 முதல் 4 பிரதிவாதிகள்** தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சகோதரியின் சட்ட வாரிசாக விளம்புகை செய்யவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரி M.C. மீனா ஆசிரியராக எங்கெல்லாம் பணியாற்றினர் என்றால் வடசேரி SMRV மேல்நிலை பள்ளியில் , ஆலம்பட்டி மேல்நிலை பள்ளியிலும், கடையாலமூடு பள்ளியிலும், அவர் இறப்பதற்கு முன்பு கடியப்பட்டிணம் பெண்கள் மேல்நிலை பள்ளியிலும் வேலை பார்த்தார். எந்த ஆண்டு எனது சகோதரி இறந்தார் என்றால் 17.04.2021 அன்று இறந்தார். அவர் இறக்கும்போது அவரது வயது என்ன என்றால் 54 ஆகும்.

2. எனது சகோதரி எத்தனை வருடங்கள் வேலை பார்த்துள்ளார் என்றால் சுமார் 22 வருடங்கள் வேலை பார்த்துள்ளார். எனது சகோதரி மேற்படி வருடங்களில் ஆசிரியராக வேலை பார்த்ததை காட்டக்கூடிய எந்த ஆவணம் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும் அவர் எந்த சார் கருவூலங்கள் மூலம் சம்பளம் பெற்றார் என்பதை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4 ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் இருந்து இறந்துபோன எனது சகோதரி சம்பளம் பெற்றார் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. எனது சகோதரி எத்தனை வருடங்களாக அவரது கணவருடன் வாழ்ந்தார் என்றால் சுமார் 7 வருடங்கள் வாழ்ந்திருப்பார். 1 ஆம் பிரதிவாதியும் எனது சகோதரியும் நீதிமன்ற மூலம் எந்த விவாகரத்து பெறவில்லை என்றால் சரிதான். அவர்களது திருமணம் இந்து முறைபடி நடைபெற்றது என்றால் சரிதான். பொதுவாக சட்டப்படி திருமணம் நடந்தால் அதை நீதிமன்றம் மூலம் சட்டபடியாக ரத்து செய்யாவிட்டால் மேற்படி திருமணம் முறிந்துவிட்டதாக கருத முடியாது என்றால் சரிதான்.

4. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நான் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறேன். நான் 4 ஆம் பிரதிவாதியிடம் இருந்து எனது சகோதரின் இறப்பின் பயனை பெறுவதற்கு ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

எதன் அடிப்படையில் நான் எனது சகோதரியின் சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை செய்து கேட்கிறேன் என்றால் எனது சகோதரிக்கு குழந்தைகள் கிடையாது.

5. எனது சகோதரி எந்த காரணதிற்காக உடல்நல குறைவு ஏற்பட்டுயிருந்தார் என்றால் Pancreatic cancer. மேற்படி உடல்நல குறைவிற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில்லை. எனது அக்கா இறந்ததற்கு பணபலன்களை அவரது கணவரான 1 ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. எனக்கு 2002 ல் இருந்து 2021 வரை எனது சகோதரி அவரது கணவருடன் இருந்தார் என்றால் சரியல்ல, அம்மாவுடன் இருந்தார். எனது சகோதரியின் பணிவேட்டில் யாரை வாரிசாக காட்டியுள்ளார் என்றால் அவரது கணவரை காட்டியுள்ளார்.

6. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 3 பிரதிவாதிகளிடம் எந்தெந்த தேதியில் மனு கொடுத்தேன் என்றால் 2021 ஆம் வருடம் கொடுத்தேன் தேதி நினைவில்லை. நான் இறந்துபோன எனது சகோதரியின் சட்டப்படியான வாரிசு என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததாலும் அரசு வகுத்துள்ள நடைமுறைகளின் படி இல்லாததால் எனக்கு வாரிசு சான்றிதழ் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது சகோதரியின் இறப்பு மூலம் கிடைக்ககூடிய பணபலன்களை பெறவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாரிசு சான்றிதழ் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. முறையான ஆவணங்களை நான் தாக்கல் செய்திருந்தால் அரசு அதிகாரிகள் எனக்கு வாரிசு சான்றிதழ் வழங்கியிருப்பார்கள் என்றாலும் எனது வழக்கு 2 முதல் 4 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டியது என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**